## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் சட்டப்பேரவை உரை (22,8,2006)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினடைய கொறடா அருமை நண்பர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் ஆற்றிய உரையில் பொதிந்து கிடக்கும் உணர்வுகளை நாமனைவரும் உணருகின்றோம். சில பேச்சுக் களால், சில நடவடிக்கைகளால், சில கோஷங்களால் அமைதியாக இருக்கின்ற நிலை கெட்டுவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற எச்சரிக்கை உணர்வோடு பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசியதாக நான் கருதுகின்றேன். அவ்வாறே அவையில் உள்ள நீங்களும் நம்புவீர்கள் என்று நான் எதிர்பார்க்கின்றேன். ஆனால் ஒன்று. நேற்று பொதுக்கூட்டத்தில் பேசப்பட்டதாக பீட்டர் அவர்கள் இங்கே சுட்டிக் காட்டிய அந்த வாசகத்தை நாம் கொஞ்சம் பிரித்துப் பார்த்து, ஆழ்ந்து பார்த்து நமக்கு நாமே சமாதானம் தேடிக் கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

பொதுவாக நாட்டை பிரித்தே தீருவோம் என்பது சட்டப்படி இப்போது குற்றம். இறையாண்மை, ஒருமைப்பாடு, நாட்டின் ஒற்றுமை, இந்தியாவின் பாதுகாப்பு இவைகளையெல்லாம் மனதிலே வைத்துத் தான் அந்த அடிப் படையில்தான் எங்களை யெல்லாம் ஆளாக்கிய அறிஞர் அண்ணா அவர்கள் நாட்டுப் பிரிவினை முழக்கத்தை கை விட்டார்கள் என்பதை இந்த அவை நன்கு அறியும். நாடும் நன்கறியும். பீட்டர் போன்றவர்கள் இருக்கின்ற பல் வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்த தலைவர்களும் நன்கறிவார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை பிரிவினை கேட்ட இயக்கம். ஆனால் இப்பொழுது பிரிவினையை நாடாத இயக்கம். நாடு இறையாண்மையோடு ஒற்றுமை உணர்வோடு நல்ல வலுவான நிலையில் விளங்க வேண்டுமென்று கருதுகின்ற இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம். எனவே யார் பேசினாலும் அது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கைக்கு மாத்திரமல்ல, இங்கே வீற்றிருக்கின்ற எல்லா கட்சிகளுடைய

கொள்கைக்கும், இலட்சியத்திற்கும் எதிராகத் தான் இருக்குமென்று நான் கருதுகின்றேன். யாரும் நாட்டைத் துண்டாட வேண்டுமென்று கூறுபவர்கள் யாரும் இங்கேயில்லை என்றும் நான் நம்புகின்றேன். திருமாவளவன் அவர் களுடைய கட்சியைப் பற்றி எனக்குத் தெரியாது. அவர்களும் இதுபோன்ற வன்முறைகளால் நாட்டைப் பிரிக்க வேண்டுமென்று சொல்கின்றவர்களாக நான் கருதவில்லை. இருந்தாலும் நேற்று பேசப்பட்ட பேச்சில் ஒரு வாசகத்தை இங்கே பீட்டர் அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். தமிழ்நாட்டிலே ஒரு காஷ்மீரை உருவாக்காதீர் என்று பேசியதாக – அது தான் தலைப்புச் செய்தி என்று நான் கருதுகிறேன். உருவாக்குங்கள் என்று சொன்னால் தான் தவறு. தமிழகத்தில் ஒரு காஷ்மீரை உருவாக்குங்கள் என்று சொல்லியிருந்தால் அது தவறு. பேசியவர் ஒரு எச்சரிக்கை மனப் பான்மையோடு தமிழகத்தில் ஒரு காஷ்மீரை உருவாக்காதீர் என்று சொன்னது “நெகட்டிவ்” வாகப் பார்த்தால், அதை உருவாக்குங்கள் என்று இருந்தாலுங் கூட அவர் வேண்டுகோள் தான் விட்டிருக்கிறார் என்று எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படி எடுத்துக் கொண்டு, அதைப் பொருட்படுத்தாமல் இருப்பது நல்லது. நாம் அதைப் பொருட்படுத்தினால், நேற்றைக்கே நான் சொல்லியிருக்கிறேன், இதையெல்லாம் நான் பொருட்படுத்தப் போவதில்லை என்று. பேசுவார்கள், பேசுவதை செயல்படுத்துவார்களா என்பது நமக்கே தெரியும். அதனால் அதைப் பற்றி கவலைப்படாமல் அந்தப் பிரச்சினையிலே இவ்வளவு ஆழமாக ஆத்திரப்பட எதுவுமில்லை என்பதை நான் நண்பர் பீட்டர் அவர்களுக்குச் சொல்லிக் கொண்டு இதோடு இந்தப் பிரச்சினையை விட்டு விட்டு நம்முடைய நாட்டிற்குத் தேவையான மக்களுக்குத் தேவையான காரியங்களைப் பார்ப்போம். அதே நேரத்திலே ஈழத் தமிழகத்திலே வேதனைப் படுகின்ற தமிழர்களுக்கும், பாதுகாப்பாக இருப்போம், அறவழியிலே நடப்போம், இந்திய நாடு கடைப்பிடிக்கின்ற வழியிலே நடப்போம் என்று எங்களைப் பொறுத்தவரையில் சொல்லியிருக்கிறோம். மத்திய சர்க்கார் என்ன முடிவெடுக்கிறதோ, அந்த முடிவின்படி நடப்போமென்று. மற்ற கட்சிகளின்

அபிப்பிராயம் வேறாக இருக்கலாம், தி.மு. கழகத்தின் கருத்து அது தான் என்பதை நண்பர் பீட்டர் அவர்களுக்குச் சுட்டிக் காட்டி இந்த அளவில் அமை கிறேன்.